**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி**

**O.S.No. 39/2024**

**2026 –ம் வருடம் ஜுலை திங்கள் 22ம் நாள் புதன்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. கிருத்திகா என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. விஜயராஜ் த/பெ. லிங்கன் வயது. 49 ஊர். புடியங்கி**

**---------------------------------------------------------------------------------**

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**PW1 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை 11.55 A.M.**

1. எனது தாத்தா 1978 ம் வருடம் வாங்கிய கிரையம் வா.த.சா.ஆ.3 சொத்து விவரத்தில் புல எண். 92ல் 28 சென்ட், புல எண். 113 ல் 22 சென்ட், புல எண். 105 ல் 1 ஏக்கர் 59 சென்ட்டில் 79 ½ சென்ட் என்று மொத்தம் 1 ஏக்கர் 29 ½ சென்ட்டை கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். புல எண். 92 ல் முழு விஸ்தீரனம் 28 சென்ட்டையும் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் புல எண். 113ல் 22 சென்ட்டையும் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பழைய புல எண். 113 க்கான புதிய புல எண் என்னவென்றால் தற்போது நியாபகமில்லை. பழைய புல எண். 92 க்கான புதிய புல எண் என்னவென்றால் தற்போது நியாபகமில்லை. பி.வா.த.சா.ஆ.3ல் 22 சென்ட் மற்றும் 28 சென்ட்டுக்கும் முழு காலை என்பதால் செக்குப்பந்தி காட்டாமல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. 79 ½ சென்ட்டுக்கு செக்குப்பந்தி காட்டியுள்ளார் என்றால் சரிதான்.

அதில் கிழக்கில் பீமன், ஹிரியன் வகையரா பூமி என்றும், மேற்கில் நத்தா பூமி, வடக்கில் நஞ்சன் பூமி, தெற்கில் மடியன் பூமி என்றும் செக்குப்பந்தி காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பழைய புல எண். 105 க்கான புதிய புல எண் என்னவென்றால் தற்போது நியாபகமில்லை. நான் தாக்கல் செய்த வழக்கில் சொத்து விவரத்தில் பி.வா.த.சா.ஆ.3ல் கண்டபடி 79 ½ சென்ட், 22 சென்ட், 28 சென்ட் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வா.த.சா.ஆ.3ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கும், தாவா சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.2 ல் எனது தகப்பனார் P.M. லிங்கன் பெயர் காணப்படவில்லை என்றால் சரிதான்.

3. வா.த.சா.ஆ.3 நாளிதழில் நான் கொடுத்த பொது அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் பழைய புல எண்கள். 92, 113, 115 புதிய புல எண்கள். 248/18, 248/14, 248/15, 248/17 மற்றும் 248/26ல் கண்ட சொத்துகள் கூட்டுக்குடும்ப சொத்துகள் என்றும், பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். அறிவிப்பில் கண்ட சொத்துகளை 4ம் பிரதிவாதி விற்பனை செய்ய முயற்சி செய்ததால் பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது என்றால் சரிதான். புல எண்கள். 248/14, 248/15, 248/17, 248/26 ஆகிய புல எண்களில் கண்ட சொத்துகளை குறித்து நான் தாக்கல் செய்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துகளை இந்த வழக்கில் ஏன் சேர்க்கவில்லை என்று சொன்னால் VAO கொடுத்த புதிய எண்ணில் நான் அறிவிப்பில் சொல்லிய புல எண்கள் இல்லை என்பதால் மேற்படி புல எண்களில் உள்ள சொத்துகளை

பற்றி இந்த வழக்கில் சொல்லவில்லை.

4. எந்தெந்த புல எண்களில் எனது தாத்தா மாதா கவுடருக்கு சொத்து இருந்தது என்ற விவரங்களே எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி கணவரின் பெயர் P.M. கிருஷ்ணன் என்றால் சரிதான். P.M. கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளில் அவரது வாரிசுகளுக்கு பாக உரிமை உள்ளது என்றால் சரிதான். P.M. கிருஷ்ணன் எந்த வருடம் இறந்தார் என்றால் 2011 அல்லது 2012ல் இறந்திருப்பார். P.M. கிருஷ்ணனுக்கு பிரேம்நாத் என்ற மகனும், மஞ்சு என்ற மகளும் உள்ளனர். இந்த வழக்கில் பிரேம்நாத் மற்றும் மஞ்சுவை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. எனது சித்தப்பா P.M. ஹால்துரை இறந்துவிட்டார். அவரது மனைவி 5வது பிரதிவாதி சுகுனா என்றால் சரிதான். P.M. ஹால்துரை நிஷாந்த் என்ற மகனும், பாவனா என்ற மகளும் உள்ளனர். நிஷாந்த் மற்றும் பாவனாவை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை.

5. P.M. கிருஷ்ணன் மற்றும் P.M. ஹால்துரை ஆகியோர்களின் வாரிசுகளும் இந்த வழக்கில் முக்கிய தரப்பினர்கள் என்றும், அவர்களை இந்த வழக்கில் சேர்க்காததன் அடிப்படையிலேயே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 3, 5, 7, 8ம் பிரதிவாதிகள் 1993ம் வருடம் பாகப்பிரிவினை மாதா கவுடர் குடும்பத்தில் ஏற்பட்டுவிட்டது என்றும், தாவா சொத்து 4ம் பிரதிவாதிக்குத்தான் உரிமை உள்ளது என்று இந்த வழக்கில் சொல்லியுள்ளதைப் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 1993ம் வருடம் எனது தாத்தா சொத்தை பிரித்துகொடுப்பதற்கு முன் என் அப்பாவிற்கு எனது தாத்தா கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து என்

அப்பா பெயருக்கு ஒரு கிரையம் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையில் என் அப்பா பெயருக்கு கிரையம் பெற்ற சொத்தை ஒதுக்கிவிட்டார்கள் என்றும், தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் இல்லை என்றால் சரியல்ல.

6. 1993ம் வருடம் பாகப்பிரிவினைக்குப் பிறகு 3–ம் பிரதிவாதி அஜ்ஜன், 5ம் பிரதிவாதியின் கணவர் ஹால்துரை எனது அப்பா பல சொத்துகளை 3ம் தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பா பெயரில் இருந்ததை விற்றுள்ளார். 1993ம் வருடமே பாகப்பிரிவினை நடந்ததால்தான் என் அப்பா சொத்தை விற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் பலமுறை பாகப்பிரிவினை கேட்டும் பாகம் பிரித்து தரவில்லை என்று சொல்லியுள்ள நிலையில் எப்போது கேட்டேன் என்றால் என் தாத்தா மற்றும் பாட்டி இறந்த பின்னர் கேட்டேன். குறிப்பிட்டு எந்தெந்த தேதியில் பாகப்பிரிவினை செய்து தரும்படி கேட்டேன் என்று வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான். எனது வழக்கில் கடைசியாக 25.08.2024ல் பிரதிவாதிகளிடம் சொத்தை பாகம் பிரித்து தரக்கோரி கேட்டோம் என்றும், பிரதிவாதிகள் பாகம் பிரித்துதர வரவில்லை என்றும், அதே தேதியில் பிரதிவாதிகள் தாவா சொத்தை 3ம் தரப்பினருக்கு விற்க முயற்சி செய்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7. பிரதிவாதிகள் என்பது 1ம் பிரதிவாதியான எனது சகோதரியை சேர்த்துதான் சொல்லியுள்ளேனா என்றால் 1, 2 பிரதிவாதிகளை தவிர மற்றவர்கள் சொத்தை விற்க முயற்சி செய்தார்கள். வழக்கில் 1, 2 பிரதிவாதிகளை தவிர மற்றவர்கள் சொத்தை விற்க முயற்சி செய்கிறார்கள்

என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சொத்தை விற்க முயற்சி செய்ததால்தான் வா.த.சா.ஆ.3 அறிவிப்பை கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கில் 25.08.2024ல் பிரதிவாதிகள் சொத்தை விற்க முயற்சிப்பதாக சொல்லியுள்ள நிலையில் வா.த.சா.ஆ.3 விளம்பரத்தை 20.07.2024ல் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

**4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the Plaintiff / Plaintiff's Counsel and admitted by the witness to be correct.**

**Sd/- G.Amirdham, 22.07.2026**
**District Munsif,**
**Kotagiri.**